போடுகின்ற ரோடுகளை கொஞ்சமாக எடுத்துக் கொண்டு, திக்காகப் போட அரசு முன்வருமா ? ஐந்து ஆண்டுகள், பத்து ஆண்டுகள் நிற்கின்றன என்று சொல்கிறார் அமைச்சர். ஆனால், ஆடுதொட்டிப் பகுதியில் ஐந்து நாட்கள் கூட வரவில்லை. அது ஆதி ஆந்திர மக்கள் வாழ்கின்ற பகுதி. ஆகவே, அடுத்து ரோடு போடுகின்ற நேரத்தில் இதுபோன்ற குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தன்மை யான, தரமான ரோடுகளைப் போட வேண்டுமென்பதுதான் நம்முடைய எண்ணமும் கூட. ஆகவே, எந்தப் பகுதியில் எப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தாலும், உடனடியாக சரி செய்யப்படும்.

கும்பகோணம் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.

* வினா எண் 350.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் பேருந்து நிலையத்தை வேறு இடத் துக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கும்பகோணம் நகராட்சி இது குறித்து நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளது. அரசிடம் தற்சமயம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகராட்சியின் சார்பாக, பேருந்து நிலையத்தை மாற்றுவதற் காக எத்தனை ஏக்கர் இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது ? அதனுடைய மதிப்பீடு என்ன ? எவ்வளவு சீக்கிரம் அது முடிக்கப்படும் ? காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதற்காக 7 ஏக்கர் 58 சென்ட் நிலத்திற்கான பட்டா அரசிடமிருந்து கும்பகோணம் நகராட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக, ரூ. 65 இலட்சம் செல வாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பஸ் ஸ்டாண் டில் எத்தனை பஸ்கள் நிற்கக்கூடிய அளவு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது ஒரு ஏ கிளாஸ் பஸ் ஸ்டாண்டாக ஏற்படுத்தப்படுகிறது. குறைந்தது 50 பஸ் களாவது நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.